# அடுக்குத்தொடரும் இரட்டைக்கிளவியும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின்
பயிற்சிப் பணியாளர் திட்டத்தின் கீழ்,
எஸ்.எஃப்.ஆர் மகளிர் கல்லூரி முதுகலை
மாணவர்கள் உருவாக்கிய புத்தகம்.

மாணவர்: ப.ரேவதி

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

சேர வாரும் செகத்தீரே

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# அடுக்குத்தொடர்

- அடுக்குத்தொடர் என்பது, ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறைகள் வரை அடுக்கி வருவது.

- இதில் அடுக்கி வரும் ஒவ்வொரு சொல்லையும் தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும்.



## கூட்டம் கூட்டமாக

பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்றன.



## குவியல் குவியலாக

மணல் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடந்தது.



குலை குலையாய்

திராட்சை குலை குலையாய் இருந்தது.



மந்தை மந்தையாக

மாடுகள் மந்தை மந்தையாக வந்தன.



சாரை
சாரையாக

எறும்புகள் சாரை சாரையாக ஊர்ந்து சென்றன.

சுக்குச்
சுக்காக



கண்ணாடி சுக்குச் சுக்காக நொறுங்கியது.



## துண்டு துண்டாக

மீனைத் துண்டு துண்டாக வெட்டினேன்.

## வேக வேகமாக




பேருந்தைப் பிடிக்க வேக வேகமாக நடந்தேன்.




மக்கள் அலை அலையாகக் கூட்டத்திற்கு வந்தனர்.




கதை கேட்கும் போது அழுகை அழுகையாக வந்தது.



ஆசை
ஆசையாக

ஆசை ஆசையாகக் கட்டிய வீடு.

ஆயிரம்
ஆயிரம்



ஆயிரம் ஆயிரம் காலமாக நிலைத்து நிற்கும் கோபுரம்.




வாகனங்கள் இரண்டும் எதிர் எதிரே மோதிக்கொண்டன.




கட்டுக் கட்டாகப் பணம் கிடைத்தது.



குலுங்கிக்
குலுங்கி

குழந்தைகள் குலுங்கிக் குலுங்கி சிரித்தனர்.

சடை
சடையாக



துறவிக்கு முடி சடை சடையாக இருந்தது.




சரம் சரமாகப் பூக்கள் தொங்கின.




சிரித்துச் சிரித்து வயிறு வலித்தது.




கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்தாள்.




சுடச்சுட வடை சுட்டார்.

# இரட்டைக்கிளவி

- இரட்டைக்கிளவி என்பது இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரே பொருளைக் குறிக்கும்.

- இரண்டு சொற்களையும், தனித்தனியாகப் பிரித்தால் பொருள் தராது.



சலசல

(நீர் அசைவின் ஒலி)

ஆற்றில் நீர் சலசல வென்று ஓடியது.



மளமள

(விரைவான செயல்)

சிறுவர்கள் உணவை மளமள வென்று சாப்பிட்டனர்.



கிடுகிடு

(நடுக்கம்)

குளிரில் ராஜா கிடுகிடு வென்று நடுங்கினான்.

படபட

(வேகமாக அடித்தல்)



சேவலின் இறக்கைகள் பயத்தில் படபட வென்று அடித்தன.



## குடுகுடு

(விரைவாக)

ராமு குடுகுடு வென்று ஓடினான்.

## பளபள

(அதிக மினுமினுப்பு)



வைரம் பளபள வென்று மின்னியது.



கலகல

(மகிழ்ச்சியான சிரிப்பொலி)

குழந்தைகள் கலகல வென்று சிரித்து விளையாடினர்.



தடதட

(பலத்த ஓசை)

படிக்கட்டில் தடதட வென்று ஏறினான்.



# திடுதிடு

(அதிர்ச்சி, பயம்)

இறப்பு செய்தியைக் கேட்டதும் என் மனம் திடுதிடு வென்று துடித்தது.

# குறுகுறு

(மெல்லிய வலி)



வயிற்றில் குறுகுறு வென்று இருந்தது.



## சரசர

(வழுக்கும் தன்மையுடன் நகர்தல்)

பாம்பு **சரசர** வென்று ஊர்ந்து சென்றது.

## மடமட

(வேகமாகக் குடித்தல்)



இனியா பாலை **மடமட** வென்று குடித்தாள்.



கொழகொழ

(பிசுபிசுப்பான தன்மை)

கஞ்சி கொழகொழ வென்று இருந்தது.



தழுதழு

(அழுகையை அடக்க முடியாமல் பேசுதல்)

சிறுமி தழுதழுத்த குரலில் பேசினாள்.



## வெடவெட

(பயத்தாலோ, குளிராலோ வேகமாக நடுங்குதல்)

சத்தம் கேட்டதும் ராஜா வெடவெட வென்று நடுங்கினார்.



## தளதள

(செழிப்பு)

பயிர்கள் தளதள வென்று வளர்ந்தன.



## லொடலொட

(நிறுத்தாமல் பேசுதல்)

அம்மா வந்ததும் **லொடலொட** வென்று பேச ஆரம்பித்தாள்.

## விம்மிவிம்மி

(அழுகையின் போது ஏற்படும் சத்தம்)



ராமு **விம்மிவிம்மி** அழுதான்.



## விறுவிறு

(சுறுசுறுப்பு, வேகம்)

வீட்டு வேலைகள் விறுவிறு வென்று நடந்தது.



## மொசுமொசு

(மென்மையான, சத்தம் இல்லாத அசைவு)

புல்லின் மீது காற்று மொசுமொசு வென்று வீசியது.



கசகச

(ஈரமான அல்லது அழுக்குத் தன்மை)


மழையில் நனைந்த உடை கசகச வென்று இருந்தது.



பொலபொல

(பொங்குதல்)

கண்களிலிருந்து கண்ணீர் பொலபொல வென்று கொட்டியது.




அவர்கள் இருவரும் கிசுகிசு வென்று பேசிக்கொண்டிருந்தனர்.




நாய் எலும்பை நறநற வென்று கடித்தது.



குபுகுபு

(கொதிக்கும் போது ஏற்படும் ஒலி)

தண்ணீர் குபுகுபு வென்று கொதித்தது.



துறுதுறு

(சுறுசுறுப்பு, குறும்பான) செயல்

பூனை எப்போதும் துறுதுறு வென்று விளையாடும்.



## கமகம

(நல்ல நறுமணம் வீசுதல்)

மல்லிகைப்பூவின் வாசனை கமகம வென்று இருந்தது.

## செகசெக

(அதிகப் பளபளப்பு, மினுமினுப்பு)



வைரக்கல் சூரிய ஒளியில் செகசெக வென்று மின்னியது.



## கொசகொச

(சீரற்ற தன்மை)

மேசையில் கம்பி இணைப்பான்கள் கொசகொச வென்று இருந்தன.

## மொறுமொறு

(நொறுங்கும் தன்மை)



அப்பளம் மொறுமொறு வென்று இருந்தது.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com